இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமானிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 05 – 2008/2009
**LWU 3315/4335** – பகிரங்க சர்வதேசச் சட்டம்
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 1
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 15.10.2008 | நேரம்: மு.ப 11.30 – மு.ப 12.10

ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

(அ) சார் ஜெரால்ட் பிட்ஸ்மோரைஸ் (*Sir Gerald Fitzmaurice*) இனால் முன்மொழியப்பட்ட ஒருமைத்துவ மற்றும் இருமைத்துவ கருத்தேற்பக்களுக்கிடையிலான இணக்கப்பாட்டின் மீது கருத்துரைக்க.

(08 புள்ளிகள்)

(ஆ) டுடு(Tutu) என்பது ஓர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்பதுடன் அது அபாயகாரமான யுத்தச் சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ளது. உயரிய மனித உரிமைகள் தராதரங்களை உள்ளடக்கிய எல்லா வகையான மனித உரிமை மீறல்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச மார்க்கிபோலோ சமவாயத்திலை, டுடு 2005ஆம் ஆண்டு உறுதிப்படுத்தியது (ratified). டுடு அரசாங்க அதிகாரிகளினால் யுத்த காலத்தில் பல மனித உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப்பட்ட திரு தொம்சன் இச்சமவாயத்தின் கீழ் நிவாரணம் கோருகின்றார்.

டுடு வின் அரசியலமைப்பானது இலங்கையின் 1978ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பினை ஒத்ததென கருதிக்கொள்க.

திரு தொம்சனுக்கு ஆலோசனை வழங்குக.

(12 புள்ளிகள்)

2. "வழக்காறுகளின் படியிறக்கத்திற்கான (demotion) பொதுவான காரணம் சர்வதேச வழக்காற்று சட்டத்தின் எழுச்சிக்காலத்தில் இருந்த பிரதிநிதித்துவத்தை விட உலக சமூகத்தின் பிரதிநிதித்துவம் மிகவும் பாரியதாக காணப்படுகின்றமையே ஆகும் (100 வருடகால இடைவெளிக்குள் நாடுகளின் எண்ணிக்கை 40இல் இருந்து அண்ணளவாக 200ஆக உயர்ந்துள்ளது). அத்துடன் அதனை விட முக்கியமாக உலக சமூகத்தின் பிரதிநிதிகள் பொருளாதார ரீதியாகவும். அரசியல் ரீதியாகவும் ஆழமாக பிரிவடைந்துள்ளன. ஆகவே பல்வகைப்பட்ட நாடுகளின் பெருமளவான எண்ணிக்கையிலான ஆதரவினை பொது விதிகள் பெறுவதென்பது மிகவும் கடினமானதாக இருக்கின்றது. அதே வகையில், தேவையான பாரிய அளவு சான்றுகளை கையகப்படுத்துவது என்பது எல்லா வேளைகளிலும் இயலுமானதாக இல்லாத காரணத்தினால் தற்கால கட்டத்தில் புதிய விதிகள் தோன்றியுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துவது என்பது அதிக கடினமாக உள்ளது."

*Cases and Materials on International Law*, D.J. Harris, 6th Ed(2004) at p 41-42

வழக்காற்று சர்வதேச சட்டத்தின் கூறுகள் மற்றும், சர்வதேச அரங்கில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பாரிய உள்வருகை என்பவற்றின் பின்னணியில் மேற்கண்ட கூற்றினை நுணுக்கமாக மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)